

Assisi Press, Ngl.-1 Ph : 04652 - 231085

# திருச்சிலுவைக் கல்லூரி
## நாகர்கோவில்

# மாணவியர் விடுதி

**தெரிந்து கொள்ளவேண்டிய தகவல்களும்**
**மேற்கொள்ள வேண்டிய ஒழுங்குமுறைகளும்**

IN CRUCE ET MARIA SPES NOSTRA

**20 - 20**

**இன்றைய விடுதி வாழ்வைப் பயனுள்ளதாக மாற்று!**
**நாளைய சமூக வாழ்வில் நம்பிக்கை ஒளி ஏற்று!**

## இரவு ஜெபம்

வாழ்வளிக்கும் வள்ளலாம் இறைவா! இன்றைய நாள் முழுவதும் எங்களைப் பாதுகாத்து எங்களை ஒரே குடும்பமாக ஒன்றுசேர்த்த உமது மேலான கிருபைக்காக நன்றி செலுத்துகிறோம். உமது பிள்ளைகளாகிய நாங்கள் முழுமையான ஈடுபாட்டுடனும், ஒருமுகச் சிந்தனையுடனும் பாடங்களைப் பயிலவும், தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறவும், தேவையான ஞானத்தை தந்தருளும். இன்றைய கடமைகளை நிறைவேற்றிவிட்டோம் என்ற நம்பிக்கையுடன் படுக்கைக்குச் செல்லவும், நாளைய கடமைகளை உமது சித்தப்படி ஆரம்பிக்கவும் தேவையான ஞானத்தைத் தந்தருளும்படி எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.



- பெற்றோர்கள் தொலைபேசியைப் பிற்பகல் 3 மணி முதல் மாலை 6 மணி வரை மட்டுமே பயன்படுத்திக் கொள்ளலாம்.
- காலை 5.00 மணி முதல் 7.30 மணி வரையும், மாலை 3.00 மணி முதல் 5.30 மணி வரையும் குளிக்கும் நேரமாகும்.
- குறிப்பேட்டில் கொடுக்கப்பட்டுள்ள விதிமுறைகளை, மாணவியரும், பெற்றோரும் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டும்.
- மாணவியர் கல்லூரி விடுதியை விட்டு வெளியில் செல்லும் போதும், விடுதிக்குள் நுழையும் போதும் சுடிதார் மட்டுமே அணிய வேண்டும்.
- மாணவியர் விடுதிக் காப்பாளரிடம் அனுமதி பெற வரும்போது குறிப்பேட்டுடன் வர வேண்டும்.
- சுவரின் மீது பென்சில், பேனா வைத்து எழுதுவதோ, வரைவதோ கூடாது.
- விடுதியில் சேர்ந்து ஜூன் மற்றும் ஜூலை ஆகிய இரண்டு மாதத்திற்குள் செல்லும் மாணவியர்க்கு மட்டும் விடுதியில் செலுத்திய Establishment பணம் திரும்பி கிடைக்கும். அதற்குப் பின் செல்லும் மாணவியர்களுக்குப் பணம் திரும்பித் தரப்படமாட்டாது.
- Refund வாங்கக் கூடிய மாணவியர்கள் விடுதியை விட்டுச் செல்லும்போது பெறுதல் வேண்டும்.
- இக்கையேட்டினைப் படித்து மனதில் நிறுத்திக் கொள்வதுடன் இக்கையேட்டினைத் தங்களிடம் வைத்திருக்கவும் வேண்டும்.

ஒளியும் உயிருமாம் எல்லாம் வல்ல இறைவன் தன் அன்பு வழியில் உங்களை நடத்திச் செல்வாராக !

அன்புடன்,

***விடுதிக்காப்பாளர்***

மேற்கூறப்பட்ட விதிமுறைகளை முழுமையாகக் கடைப்பிடிப்போம் என்று உறுதி அளிக்கிறோம்.

பெற்றோரின் கையொப்பம்　　　　　மாணவியின் கையொப்பம்

## விடுதியும் அதன் உயர் குறிக்கோளும்

திருச்சிலுவை கல்லூரி வளாகத்தில் மாணவியர் தங்கிப் படிப்பதற்கு ஏற்றவாறு நல்ல சூழ்நிலையில் விடுதி அமைந்துள்ளது. கல்லூரி முதல்வரே விடுதியின் தலைமைக் காப்பாளர். முதல்வரேயன்றி விடுதியிலேயே மாணவியருடன் தங்கி அவர்களை நல்வழியில் நெறிப்படுத்துவதற்கும் குறை களைந்து தேவையறிந்து வேண்டியன செய்வதற்கும் விடுதிக்காப்பாளர் இருவர் உள்ளனர். இவர்களுக்குத் துணையாகப் பணிகளையும் பொறுப்புகளையும் பகிர்ந்துகொள்ள முழுநேரத் துணை விடுதிக் காப்பாளர் ஒருவரும் உள்ளார்.

இங்கு தங்கிப் பயில விரும்புவோர் கற்கும் காலத்திலேயே தாம் தங்கியிருக்கின்ற நோக்கத்தையும் பெற்றோரின் ஆர்வத்தையும் தியாகத்தையும் காலத்தின் அருமையையும் உணர்ந்து தொலைநோக்குடையவர்களாய் கல்வியில் முழுக் கவனம் செலுத்துவதோடு முழு ஆளுமை உடையவர்களாகவும் துணிவுடன் சவால்களை ஏற்று நம்பிக்கையுடன் நிறைவாழ்வை நோக்கி நடைபோடுபவர்களாகவும் உருவாக வேண்டும் என்ற குறிக்கோளைக் கருத்தில் கொண்டு இவ்விடுதி செயல்படுகிறது. எனவே அதற்கு ஏற்றவாறு திட்டங்களை வகுக்கிறது. ஒழுங்கு முறைகளை நிர்ணயிக்கிறது. அவற்றைக் கண்டிப்புடன் நடைமுறைப்படுத்துவதில் முனைப்புடன் செயல்படுகிறது.

## நுழைவு

கல்லூரியில் சேர்ந்த பின்னரே விடுதியில் தங்க அனுமதி வழங்கப்படும். விடுதியில் சேர விரும்பும் மாணவியர் காப்பாளரைச் சந்தித்துப் பேசிய பின்னரே சேர முடியும். இச்சந்திப்பின்போது மாணவியரின் பெற்றோர் / பாதுகாவலர் உடனிருக்க வேண்டும்.

விடுதியின் உறுப்பினராக ஓராண்டு காலம் மட்டுமே இருக்க முடியும். மாணவியரின் நடவடிக்கைகளில் காப்பாளருக்குக் குறைகாண நேர்ந்தால் விடுதியிலிருந்து நீக்க உரிமை உண்டு. அதுபோல் படிப்பில் பின்தங்கியிருக்கும் மாணவியரைத் தொடர்ந்து தங்க வைப்பது குறித்தும் காப்பாளரே முடிவு செய்வார். அடுத்த

ஆண்டு விடுதியில் சேர்வதற்கு தங்கள் பெற்றோர் / பாதுகாவலருடன் விடுதிக் காப்பாளரைச் சந்தித்துப் பேசிய பின்னர் அதற்குரிய விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்து கொடுத்தல் வேண்டும்.

## தேவைப்படுவன

மாணவியர் தமக்குத் தேவையான படுக்கை, போர்வை, தட்டு, தம்ளர் (எவர்சில்வர்), வாளி, டிபன் பாத்திரம், சூட்கேஸ், பூட்டு, டார்ச் லைட் ஆகியவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்.

விடுதியில் மாணவியர் சுடிதார், நைட்டி வகைகளையே அணிதல் வேண்டும்.

## தங்குமிடம்

இங்குத் தங்குவோர் தத்தம் அறைகளையும் சுற்றுப்புறத்தையும் கழிவறைகளையும் தூய்மையாக வைத்திருத்தல் வேண்டும். குப்பைகளை அதற்குரிய இடத்தில் போடவேண்டும். ஈரமான துணிகளை அறைக்குள் போடுதல் கூடாது.

மாணவியர் தம் உடைமைகளைப் பாதுகாக்கும் பொருட்டு வகுப்புக்குச் செல்கையில் அறைகளைப் பூட்டிச் செல்வது நலமாகையால் மறவாது இதனைச் செய்தல் வேண்டும். மாணவியரின் உடைமைகளுக்கு அவர்களே பொறுப்பாவர். விடுதியிலுள்ள பொருட்கள் காணாமல் போனாலும், ஏதேனும் ஊறு நேர்ந்தாலும் மாணவியரே அவற்றிற்குப் பொறுப்பாவர். கல்லூரியில் முதல் மணி அடிப்பதற்கு முன் அனைவரும் வகுப்புகளுக்குச் சென்றிருக்க வேண்டும். மாணவியர் தமக்குக் கொடுத்திருக்கும் அறைகளையும், கட்டில்களையும் தம் விருப்பம்போல் மாற்ற முடியாது. ஆனால் காப்பாளர் கணிப்பின்படி மாற்றம் தேவையெனக் கருதினால் அவரது அனுமதியின்படி மாற்றலாம். காப்பாளரின் அனுமதியின்றிப் பிற மாணவியரின் அறையினுள் நுழையலாகாது. விடுதியில் தங்காத ஏனைய மாணவியரைத் தம் அறைக்கு அழைத்து வரலாகாது. விடுதி மாணவியர் கடைகளுக்கும், தோழியரின் வீடுகளுக்கும் செல்வதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது. மாதம் இருமுறை வீட்டிற்குச் செல்லும் பொழுதோ அல்லது பார்வையாளர்கள் வரும்பொழுதோ தேவையானதைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

பணம் அல்லது பிற விலை உயர்ந்த பொருட்களை மாணவியர் வைத்திருந்தால் அதற்கு அவர்களே முழுப்பொறுப்பாவர். மாணவியர் பொன் அணிகலன்களைத் தவிர்க்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

விடுதி மற்றும் உணவு, நடவடிக்கைகளோடு தொடர்புடைய தகவல்கள், குறைகள் அனைத்தையும், காப்பாளர், முதன்மை காப்பாளர் ஆகியோரின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும்.

- விடுதி மாணவியர் தலைவியும் ஏனைய மாணவியர் பிரதிநிதிகளும் பொதுவான தேவைகளைக் காப்பளரிடம் எடுத்துரைப்பர்.
- மாணவியர் நோயுற்றால் உடனே காப்பாளரிடம் தெரிவிக்க வேண்டும். வெற்றி பெறுவதற்குக் கடின உழைப்பு தேவை. தன் வேலையை ஒழுங்காகச் செய்யாது கடைசி நிமிடத்திற்காகக் காத்திருப்பது நல்லதன்று. திட்டமிட்டு முறையாகப் படித்தால் நற்பயன் பெறுவது உறுதி. அமைதியாகப் படித்துக் கொண்டிருக்கும் மாணவியருக்கு இடையூறு விளைவிக்காதிருப்பதை எல்லா மாணவியரும் கவனத்தில் கொள்ளவேண்டும்.
- விடுதி வாழ்க்கை மகிழ்ச்சி மிகுந்ததாக, நிறைவானதாக, திருப்தி மிகுந்ததாக அமைய வேண்டுமெனில், நாம் தோழமை உணர்வுடையவர்களாக ஒற்றுமையாக வாழ்வதுடன், ஒருவரையொருவர் புரிந்து கொள்பவராகவும் இருத்தல் வேண்டும். எனவே மாணவியரிடையே பிரிவினை ஏற்படுத்தும் தீய இயல்புகள் புகாதவாறு பார்த்துக் கொள்ளுதல் வேண்டும்.
- மாதத்திற்கு ஒருமுறை தான் பார்வையாளர்கள் மாணவியரைப் பார்க்க வரவேண்டும். அவசரத் தேவையின் பொருட்டு கண்டிப்பாக மாணவியரைப் பார்க்க வேண்டுமென்றால் விடுதிக் காப்பாளரிடமிருந்து முன்னரே அனுமதி பெற்றபின்தான் சந்திக்க இயலும்.
- விடுதியில் செல் போன் பயன்படுத்தக் கூடாது. பிடிபட்டால் திருப்பித் தரப்படமாட்டாது.
- மாலை 3 மணிக்குப்பின் விடுதியில் இருக்கும் மாணவியர் அவசரத் தேவைக்காக வெளியே செல்ல நேரிட்டால் 5.45 மணிக்குள் விடுதியில் வந்து சேர்ந்திருக்க வேண்டும்.
- எக்காரணத்தைக் கொண்டும் ஒருவர் மற்றவரது அறைக்குச் செல்ல அனுமதி கிடையாது. அறைகளை மிகவும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

## பார்வையாளர்கள்

மாதத்தின் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமைகளில் முற்பகல் 9 மணி முதல் மாலை 6 மணிவரை பெற்றோரும் பெற்றோரின் அனுமதி பெற்ற உறவினர்களும் பார்வையாளருக்குரிய அட்டையுடன் வரலாம். எக்காரணங்கொண்டும் பார்வையாளர்களை அறைக்கு அழைத்துச் செல்லக்கூடாது.

மேலும் பெற்றோர் இடைப்பட்ட நாட்களில் காப்பாளர் அனுமதியின்றி மாணவியரைச் சந்தித்தல் கூடாது.

## கிறித்தவ வாழ்க்கை

மாணவியரின் ஆன்மீக வளர்ச்சியில் தனிக்கவனம் செலுத்தப்படுகிறது. ஆகவே கிடைக்கும் வாய்ப்புகளை மாணவியர் நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும். வளாகத்தினுள் அமைந்திருக்கும் சிற்றாலயத்தில் நாள்தோறும் காலை 6.30 மணிக்குத் திருப்பலியும் மாலை 6.00 மணிக்குச் செபமாலையும் நடைபெறும். இவ்வழிபாடுகளில் கத்தோலிக்க மாணவியர் கலந்துகொண்டு அன்றாட வழிபாட்டுப் பழக்கத்தை உருவாக்க வேண்டுமென்பதும் ஆன்மீக வாழ்வில் ஒன்றிப்பு உடையவர்களாக வாழ வேண்டுமென்பதும் எமது நோக்கம். எனவே கத்தோலிக்க மாணவியர் இவ்வழிபாடுகளில் தவறாமல் பங்கு பெறுவதில் இந்நிறுவனம் அதிகக்கவனம் செலுத்துகிறது.

ஒப்புரவு அருட்சாதனத்தின் சிறப்பு வழிபாடுகள் மாணவியரின் ஆன்மீக வளர்ச்சிக்கு உறுதுணை புரிகின்றன. அடக்கமான ஆடைகளுடன் வழிபாடுகளில் பங்கு பெறுவது பக்தி நிலையை மிகுவித்து ஒன்றிப்பையும் பயனையும் விளைவிக்கும்.

Paraliturgical service (மாதம் ஒருமுறை) ஆன்மீக, ஆளுமை வளர்ச்சிக்கான கருத்தரங்குகள், சிறப்புரைகள் நடத்தப்படும்.

## பொதுக்குறிப்புகள்

வாசிப்பு அறையில் நாளிதழ்களும், வார, மாத இதழ்களும் உள்ளன. அவற்றை மாணவியர் தக்க முறையில் பயன்படுத்த வேண்டுமேயன்றி, அவற்றை அங்கிருந்து அகற்றவோ, மாற்றி வைக்கவோ கூடாது.

## உண்ணுமிடம்

வீடுகளில் கிடைக்கும் உணவைப் போன்று விடுதியில் எதிர்பார்க்க முடியாது. இருப்பினும் ஆரோக்கியமான உணவை மாணவியர் பெற நாங்கள் பெருமுயற்சி செய்கிறோம். ஆகவே அதிக எண்ணிக்கையிலுள்ள மாணவியர் குழுவிற்கு உணவளிப்பதில் ஏற்படும் இன்னல்களை மாணவியரும், பெற்றோரும் புரிந்துகொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம்.

விடுதியில் சைவ, அசைவ உணவுகள் பரிமாறப்படுகின்றன. உணவுக் கட்டணம் அந்தந்த மாதச் செலவிற்கேற்ப மாற்றமடையும். உணவு பின்வரும் நேரங்களில் பரிமாறப்படும்.

| | |
|---|---|
| **காலை உணவு** | **07.30 மணி** |
| **பகல் உணவு** | **12.00 மணி** |
| **தேநீர்** | **04.00 மணி** |
| **இரவு உணவு** | **07.00 மணி** |

சாப்பாட்டிற்கென்று உணவு பொறுப்புக்குழு (Mess Committee) அமைக்கப்பட்டு அவர்களின் கருத்துக்களும், கணிப்புகளும் வேண்டியவாறு எடுத்துக் கொள்ளப்பட்டு நடைமுறைப் படுத்தப்படுகின்றன.

சைவ உணவிலிருந்து அசைவத்திற்கோ அல்லது அசைவத்திலிருந்து சைவத்திற்கோ மாற வேண்டுமெனில் ஒரு பருவத்தின் (Semester) இறுதியில் தான் முடியும்.

ஒவ்வொரு மாதமும் 30 ஆம் தேதிக்குள் செலுத்த வேண்டிய உணவுக் கட்டணத் தொகை பெற்றோர், பாதுகாவலருக்குத் தெரிவிக்கப்படும். தொடர்ந்து வரும் 10 ஆம் தேதிக்குள் அக்கட்டணத்தைச் செலுத்த வேண்டும். தவறினால் நாளொன்றுக்கு

**11–15 ஆம் தேதி வரை 2 ரூபாய் வீதமும்**

**16–20 ஆம் தேதி வரை 3 ரூபாய் வீதமும்**

**21–30 ஆம் தேதி வரை 4 ரூபாய் வீதமும்**

**அபராதம் செலுத்த வேண்டும்.**

## உணவுக்கட்டணம்

விடுதியில் நுழைய வரும்போது ஒவ்வொரு மாணவியும் செலுத்த வேண்டிய தொகை பின்வருமாறு.

**உணவிற்கு முன்பணம்** – ரூ. 2000 (Mess Advance)

(இத்தொகை ஏப்ரல் மாத உணவுக் கட்டணத்திற்குப் பயன்படுத்தப்படும்)

| | |
|---|---|
| நிறுவனக் கட்டணம் | – ரூ. 8000 |
| மொத்தம் | – ரூ. 10,000 |

இதைத் தவிர அந்தந்த மாத உணவுக் கட்டணம் பெற்றோருக்குத் தெரிவிக்கப்படும்.

## விடுதியின் கால அட்டவணை

| | |
|---|---|
| **காலையில் எழும்பும் நேரம்** | **– காலை 5 மணி** |
| **திருப்பலி** | **– காலை 6.30 மணி** |
| **சிற்றுண்டி** | **– காலை 7.00 மணி** |
| **கல்லூரி நேரம்** | **– காலை 8.45 மணி** |
| **மதிய உணவு** | **– பகல் 12.00 மணி** |
| **தேநீர்** | **– மாலை 4.00 மணி** |
| **ஜெபமாலை** | **– மாலை 6.00 மணி** |
| **இரவு உணவு** | **– இரவு 7.00 மணி** |
| **உரையாடி மகிழும் நேரம்** | **– 7.00 – 7.45 மணி** |
| **இரவு ஜெபம்** | **– இரவு 7.50 முதல் 8.00 மணி** |

## விடுதிப் பேரவை (Hostel Assembly)

மாலையில் படிப்பு அல்லது விளையாட்டு

இதைத்தவிர மற்ற நேரங்கள் அனைத்தும் படிப்பிறரியதே.

விடுதி மாணவியர் பதினைந்து நாளுக்கு ஒருமுறை தான் வீட்டிற்குச் செல்ல அனுமதிக்கப்படுவர். வெள்ளிக்கிழமை மாலை சென்றுவிட்டு ஞாயிறு மாலை 6.00 மணிக்குள் அல்லது திங்கள் காலை 8.30 மணிக்குள் விடுதிக்குத் திரும்பவேண்டும். அவ்வாறு வரத்தவறும் மாணவியர் பெற்றோரை அழைத்துவரவேண்டும். இல்லையேல் விடுதியில் அனுமதிக்கப்படமாட்டார்கள். விடுதிக் காப்பாளரின் அனுமதியின்றி வீட்டிற்குச் செல்லும் மாணவியர் மற்றும் அடிக்கடி வகுப்பிற்கு வருகைதராத மாணவியர் மேல் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

விடுதியில் தொலைபேசி வசதி உள்ளது. விடுதிக் காப்பாளரின் அனுமதியுடன் பெற்றோர் அனுமதி தரும் நபர்களுடன் மட்டுமே பேச அனுமதிக்கப்படுவர். எனவே அந்த நபர்களின் பெயரும் படிவத்தில் இடம்பெற வேண்டும். தொலைபேசியில் தொடர்பு கொள்ளக் குறிக்கப்பட்டுள்ள நேரம் மாலை 3.00 முதல் 6.00 மணி வரை மட்டுமே. மற்ற நேரங்களில் விடுதிக்காப்பாளர் அறையில் இருக்கும் நேரத்தில் மட்டுமே தகவல்கள் பெறப்பட்டு மாணவியருக்குத் தெரிவிக்கப்படும்.

விடுதி தொலைபேசி எண்: 04652 – 260897.

## ஒழுங்குகள்

விடுதி நன்முறையில் இயங்குவதற்கும் மாணவியர் படிப்பதற்கேற்ற சூழ்நிலையை உருவாக்குவதற்கும் பொறுப்புணர்வு, தன்னடக்கம் முதலியவற்றை வளர்ப்பதற்கு அமைதியைக் கடைப்பிடிப்பது மிக மிக அவசியமாகிறது. வெவ்வேறு பாடப்பிரிவுகளிலுள்ள மாணவியர் ஒரே அறையில் இருப்பதனால் அனைவரும் இடையூறின்றிப் படிப்பதற்குக் கண்டிப்பாக அமைதியைக் கடைப்பிடிக்க வேண்டும். எனவே அறைகளில் பேசுவது, அமைதியைக் கெடுக்கும் மற்ற செயல்களில் ஈடுபடுவது போன்றவற்றைக் கண்டிப்பாகத் தவிர்க்கவேண்டும். குறிப்பாக காலை 8.00 மணி முதல் 8.30 மணி வரையும், மாலை 8.00 மணி முதல் காலை 7.30 மணி வரையும் அமைதிச் சூழலைக் காக்க வேண்டும். விடுமுறை நாட்களில் காலை 9.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை அனைவரும் படிக்கும் நேரமாகும். இரவு 7.00 முதல் 7.45 மணி வரை உரையாடி மகிழும் நேரம். அப்போது அறைகளில் இருப்பதைத் தவிர்க்க வேண்டும். இந்நேரம் முடிந்தபின் 5 நிமிடம் குழு இறை வேண்டுதலுக்குப்பின் மீண்டும் தங்களை முழுமையாகப் படிப்பில் ஈடுபடுத்திக் கொள்ளவேண்டும்.